2018 மே 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 76, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. சந்திரசேகர், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

76—

வீட்டுமனைப் பட்டா

***11954—திரு. இரா. சந்திரசேகர்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணப்பாறை தொகுதி, பொன்னம்பட்டி பேரூராட்சி, 6-வது வார்டு பகுதியில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர் குலம் காக்கும் தமிழர் குல சாமி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மணப்பாறை சட்டமன்றத் தொகுதி, மருங்காபுரி வட்டம், பொன்னம்பட்டி பேரூராட்சி, 6-வது வார்டு, திடீர் நகர் என்ற பகுதியானது துவரங்குறிச்சி கிராமம், புல எண் 374, துலக்கன்ராய் குளம் (எ) செட்டிக்குளம் பரப்பு 1.99.0 ஹெக்டேர் மற்றும் புல எண் 375 குட்டை பரப்பு 2.65.5 ஏர்ஸ் என்று கிராமக் கணக்குகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பகுதியானது நீர்நிலைப் புறம்போக்கு இனங்களில் வருவதாலும், மாண்பமை உயர் நீதிமன்றத்தில் நீர்நிலைப் புறம்போக்கிற்கு பட்டா வழங்க தடையாணை வழங்கப்பட்டுள்ளதாலும், அதன்படி

தற்போது நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட வீட்டுமனைகளுக்கு பட்டா வழங்க இயலாத நிலை உள்ளது.

இருப்பினும், நீர்வழிப் பாதை போன்ற ஆட்சேபத்திற்குரிய புறம்போக்கு நிலங்களில் வசிக்கும் ஏழையெளிய மக்களுக்கு நிரந்தரமாக வீடு வழங்க வேண்டுமென்பதற்காகவும், இத்தகைய நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுப்பதற்காகவும் சம்பந்தப்பட்ட கிராமங்களில் வருவாய்த் துறையின் மூலமாக தனியார் நிலங்களைக் கையகப்படுத்தி, ஏழைக் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டாவினை இலவசமாக வழங்கும் புதிய திட்டத்தினை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு செயல்படுத்தும் என 2018-2019 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் ஏழையெளிய மக்களுடைய வயிற்றிலே பால் வார்க்கிற வகையிலே ஒரு சிறப்பான அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே அரசு இதனை ஆய்வு செய்து, தற்போது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. சந்திரசேகர் அவர்கள்.

திரு. இரா. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘மக்களால் நான், மக்களுக்காகவே நான்’ என்று வாழ்ந்து, தமிழக மக்களின் மனதிலும், இல்லங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் அம்மாவின் அரசை சிறப்பாக வழிநடத்திக் கொண்டிருக்கின்ற தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

மணப்பாறை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பொன்னம்பட்டி பேரூராட்சியிலுள்ள 6-வது வார்டு பகுதியில் சுமார் 250 குடும்பங்கள் 50 ஆண்டுகளாக சர்வே எண் 375-ல் குடியிருந்து வருகிறார்கள். இவர்கள் வசிக்கும் பகுதி ஆயக்கட்டு இல்லை, நீர்ப்பிடிப்புப் பகுதியாகவும் இல்லை, குட்டையாகவும் இல்லை. இப்பகுதி மக்கள் வீட்டு வரி செலுத்தி, வீட்டு வரி ரசீது

2018 மே 29]

பெற்றிருக்கின்றார்கள்; மின் இணைப்பு பெற்றிருக்கின்றார்கள், குடிநீர் இணைப்பையும் பெற்றிருக்கின்றார்கள். நல்ல சாலை வசதியுடன் இப்பகுதியிலுள்ள மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, இம்மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையான வீட்டுமனைப் பட்டாவினை வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த நிலத்தினுடைய வகைப்பாடு பற்றிய தகவல்களை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அதை ஆய்வு செய்து, அதில் உண்மை இருக்கிறபட்சத்திலே, ஆட்சேபகரமான புறம்போக்கு, நீர்நிலைப் புறம்போக்காக இல்லாதபட்சத்திலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக பட்டாவை வழங்கும். அந்தவகையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஆய்வு செய்து, அதன் அடிப்படையிலே நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. சந்திரசேகர் அவர்கள்.*

முற்பகல் 11-15

திரு. இரா. சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னம்பட்டி பேரூராட்சிப் பகுதி மக்களுக்குப் பட்டா வழங்குவதற்கு தீர்மானம் எண் 244/26-2000, 9-11-2006 ஆம் நாளன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. இப்பேரூராட்சியில் சர்வே எண் 451/1-ல் அரசுப் புறம்போக்கு 1.78.5 குட்டையில் 459/8 நத்தம் 086.0 மற்றும் 459/9 நத்தம் 02.6.5 மற்றும் 459/10 நத்தம் 01.5 என பட்டா வழங்கியுள்ளார்கள். ஏற்கெனவே குட்டைப் புறம்போக்காக இருக்கின்ற சர்வே எண் 459-ல் உள்ள இடத்திற்கு பட்டாவை வழங்கியுள்ளார்கள். எனவே, இதைக் கருத்தில் கொண்டு, இப்பகுதியினுடைய அரசு அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, தாழ்த்தப்பட்ட, ஏழையெளிய மக்கள் அதிகம்*

வசிக்கும் இப்பகுதிக்கு பட்டா வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, பட்டா வழங்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்திலே நலிந்த பிரிவினர்களின் முன்னேற்றத்திற்கு அடிப்படைத் தேவையான வசிப்பதற்கு இடம் வழங்குவதே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் முக்கிய கொள்கையாகும். அந்தவகையிலே, ஆட்சேபகரம் அல்லாத அனைத்து இடங்களிலும் பட்டா வழங்கப்பட்டு வருகிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்ற அந்தக் கருத்தின் அடிப்படையிலே, அது உரிய ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, மக்கள் நலன் சார்ந்து வைத்திருக்கின்ற அந்தக் கோரிக்கையிலே உடனடியாக 250 குடும்பங்களுக்கும் பட்டா வழங்குவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், ஒப்படை செய்ய எங்கெங்கு நிலம் உள்ளதோ, அங்கு தகுதியுள்ள நபர்களுக்கு வருவாய் நிலை ஆணை எண் 21-ன்கீழ் வீட்டுமனை வழங்கப்பட்டு வருகிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

77—

அடிப்படை வசதிகள்

***24755—திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—